## September 5, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடு முழுவதும் 302 அமைச்சர்கள் (47%) மீது கொலை, ஆள்கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் பதிவாகிஉள்ளதாக ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடி ஆர்) ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.
   i. பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள் தீவிர குற்ற வழக்குகளில் கைதாகி 30 நாள்கள் சிறையில் இருந்தால் அவர்களின் பதவியைப் பறிக்கும் மூன்று சட்ட மசோதாக்களை அண்மையில் மத்திய அரசு கொண்டு வந்து நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிசீலனைக்கு அனுப்பியது.
   ii. இந்நிலையில், 27 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களின் அமைச்சர்கள் மத்திய அமைச்சர்கள் என மொத்தம் 643 பேர் 2020 மற்றும் 2025-ஆம் ஆண்டு காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது தாக்கல் செய்திருந்த பிரமாணப் பத்திரத்தை ஏடிஆர் அமைப்பு ஆய்வு செய்தது.
   iii. அதில், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 302 அமைச்சர்கள் மீது குற்ற வழக்குகள் இருப்பதாகவும், 174 பேர் தீவிர குற்ற வழக்குகளை எதிர்கொண்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.
   iv. மத்திய அமைச்சர்களைப் பொருத்தவரை, மொத்தமுள்ள 72 மத்திய அமைச்சர்களில் 29 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   v. **60%-க்கும் மேற்பட்ட குற்ற வழக்கு அமைச்சர்கள் உள்ள 11 பேரவைகள்** - தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், பிகார், ஒடிஸா, மகாராஷ்டிரம், கர்நாடகம், பஞ்சாப், தெலங்கானா, ஹிமாசல பிரதேசம், தில்லி, புதுச்சேரி.
   vi. **குற்ற வழக்கு அமைச்சர்கள் இல்லாத பேரவைகள்** - ஹரியாணா, ஜம்மு - காஷ்மீர், நாகாலாந்து, உத்தரகண்ட்.
2. ஜமைக்காவில் நடைபெற்ற தேர்தலில் தற்போதைய பிரதமர் ஆண்ட்ரு ஹால்னஸ் மூன்றாவது முறையாக வெற்றி பெற்றார்.
3. ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் இந்த வாரம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,200-ஐ கடந்துள்ளது.
   i. ரிக்டர் அளவுகோலில் 6.0 அலகுகளாகப் பதிவான இந்த நிலந டுக்கம், மலைப் பகுதிக ளையும் தொலைவில் உள்ள கிராமங்களை யும் கடுமையாக பாதித்துள்ளது.
4. மணிப்பூரில் வன்முறையைக் கைவிட்டு, அமைதித் தீர்வுக்குப் பணியாற்றவும், பிராந்திய ஒருமைப்பாட்டை பராமரிக்கவும் ஒப்புக்கொண்டு, மத்திய-மணிப்பூர் அரசுகளுடன் இரு குகி- ஜோ பழங்குடியினக் குழுக்கள் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
   i. குகி தேசிய அமைப்பு (கேஎன்ஓ), ஐக்கிய மக்கள் முன்னணி (யுபி எஃப்) ஆகிய அந்த இரு குழுக்களும், மாநிலத்தில் பதற்றத்துக்குரிய பகுதிகளில் இருந்து தங்கள் முகாம்களை வேறு இடத்துக்கு மாற்றவும் ஒப்புக்கொண்டுள்ளன. குகி தேசிய அமைப்பின்கீழ் 16 குழுக்களும், ஐக்கிய மக்கள் முன்னணியின்கீழ் 7 குழுக்களும் செயல்படுகின்றன.

ii. மணிப்பூரில் கடந்த 2023-இல் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே பெரும் கலவரம் ஏற்பட்டு, வன்முறை தொடர்ந்தது. 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், வீடு களைவிட்டு வெளியேறிய லட்சக் கணக்கானோர் தொடர்ந்து நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

iii. இம்பால் - திமாபூர் இடையேயான தேசிய நெடுஞ்சாலை (என்எச்) 02-இல் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சகம் உறுதி அளித்ததையடுத்து, அதைத் திறக்க குகி-ஜோ கவுன்சில் ஒப்புக்கொண்டது.

iv. தாங்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இருந்து குகி-ஜோ குழுக்களின் முகாம்கள் இடம் மாற்றப்பட வேண்டும் என்பதே குகி-ஜோ கவுன்சிலின் முக்கியக் கோரிக்கையாகும்.

v. மணிப்பூர் முதல்வராக இருந்த பிரேன் சிங் கடந்த பிப்ரவரியில் பதவி விலகினார். இதையடுத்து, சட்டப்பேரவை முடக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் உள்ளது. மாநில ஆளுநராக அஜய் குமார் பல்லா பதவி வகித்து வருகிறார்.

5. தேசிய அளவிலான சிறந்த உயர் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த தரவரிசையில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

i. முதல் 100 இடங்களில் அதிக (17) உயர் கல்வி நிறுவனங்கள் இடம்பெற்ற மாநிலம் என்கிற பெருமை தமிழகத்துக்கு கிடைத்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக 11 உயர் கல்வி நிறுவனங்களுடன் மகாராஷ்டிரம் இரண்டாம் இடத்திலும், 9 உயர் கல்வி நிறுவனங்களுடன் உத்தர பிரதேச மாநிலம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

ii. தேசிய அளவிலான சிறந்த உயர் கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் ஏழாவது ஆண்டாக சென்னை ஐஐடி முதலிடம் பிடித்து அசத்தியுள்ளது.

iii. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி) இரண்டாம் இடமும், தில்லி ஐஐடி மூன்றாம் இடமும் பிடித்துள்ளன.

iv. நாட்டிலுள்ள உயர் நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும் வகையில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய அளவிலான உயர் கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலை (என்ஐஆர்எஃப்) மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டு வருகிறது.

6. இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையே விரைவில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டிஏ) மேற்கொள் ளப்படும் என பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லியன், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் நம் பிக்கை தெரிவித்தனர்.

i. வர்த்தகம், தொழில்நுட்பம், முதலீடு, புதிய கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து மூவரும் விவாதித்தனர். அதேபோல் இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதியாகும் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

ii. அடுத்த ஆண்டு இந்தியாவில் இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் பங்கேற்க உர்சுலா

வான் டெர் லியன் மற்றும் அன்டோனியோ கோஸ்டா ஆகிய இருவருக்கும் பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

7. உலகளாவிய ஸ்திரமற்ற புவி-அரசியல் சூழலைக் கருத்தில்கொண்டு, இந்தியா-சிங்கப்பூர் வர்த்தக உறவு மற்றும் சந்தை அணுகலை வலுப்படுத்த பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரதமர் லாரன்ஸ்வாங் முடிவு செய்தனர்.
    i. இருதரப்பு நல்லுறவை விரிவான வியூக கூட்டாண்மை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கான செயல்திட்டத் தையும் அவர்கள் வெளியிட்டனர்.
    ii. இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணமாக கடந்த வந்த சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வாங், தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.
    iii. பின்னர், விமானப் போக்குவரத்து, திறன் மேம்பாடு, பசுமை-எண்மசார் கடல்வழிப் போக்குவரத்து, விண்வெளி, அடுத்த தலைமுறை நிதி உள்கட்டமைப்புக்கான எண் மசார் தரவுப் புத்தாக்கம் உள்ளிட்ட துறைகளில் 5 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.
    iv. முன்னதாக, சிங்கப்பூரின் எஸ்பிஏ இன்டர்நேஷனல் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட மும்பை ஜவாஹர்லால் நேரு துறைமுகத்தின் 2-ஆவது சரக்கு முனையத்தை (1 பில்லியன் டாலர் முதலீடு) இரு தலைவர்களும் காணொலி மூலம் கூட்டாக திறந்துவைத்தனர். இந்தியாவின் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர் சிங்கப்பூர் என்பது குறிப்பிடத்தக்கது.

8. இஸ்லாமிய மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலத் தேவையான நிதியை ஒதுக்கி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.
    i. இஸ்லாமிய மாணவர்கள் 10 பேர் வெளிநாடுகளில் உயர்கல்வி பயில புதிய திட்டம் வகுக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.
    ii. இந்த அறிவிப்பைச் செயல் படுத்தும் வகையில், நிகழ் நிதியாண்டில் 10 இஸ்லாமிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3.60 கோடி ஒதுக்கலாம்என்று சிறுபான்மையினர் நலத் துறை ஆணையர் சார்பில் அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.
    iii. இதைப் பரிசீலித்த தமிழ்நாடு அரசு, ரூ.3.60 கோடியை ஒதுக்கியுள்ளது. அதாவது, ஒரு மாணவருக்கு தலா ரூ.36 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

9. உள்ளாட்சித் தேர்தலில் மின்னணு வாக்கு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச் சீட்டுகளை பயன்படுத்துமாறு மாநில தேர்தல் ஆணையத்துக்கு கர்நாடக அமைச்சரவை பரிந்துரைத்துள்ளது.
    i. பெங்களூரு, விதானசௌதாவில் முதல்வர் சித்தராமையா தலைமையில் கர்நாடக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.
    ii. விரைவில் நடக்கவிருக்கும் கிராம பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தலில் மின்னணு வாக்கு இயந்திரங்களுக்குப் பதிலாக, காகித வாக்குச் சீட்டுகளை பயன்படுத்தும்படி மாநில தேர்தல் ஆணையத்துக்கு பரிந்துரைத்து அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

iii. மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீதான நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கை மக்கள் மத்தியில் குறைந்துவருகிறது.

iv. அதேபோல, வாக்காளர் பட்டியலை தயாரித்து, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான தகுந்த திருத்தங்களைச் செய்யுமாறு மாநில தேர்தல் ஆணையத்தை அமைச்சரவை கேட்டுக்கொண்டுள்ளது.

v. உள்ளாட்சித் தேர்தலில் காகித வாக்குச் சீட்டுகளை பயன்படுத்த வகைசெய்யும் சட்டத் திருத்தங்களை கொண்டுவரவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இனி நடக்கவிருக்கும் எல்லா உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை காகித வாக்குச்சீட்டு முறையில் நடத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்றார்.